**அந்தரங்கமானது**

**09/ GIT/ INS/ PR/01**

எனது எண்: DOE/9/3/5/GIT/2019-2022(2023)
பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீட்டு) கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்லை.
2023.11.03ஆம் திகதி

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

**பொதுத் தகவல் தொழில்நுட்பப் (GIT) பரீட்சை – 2019, 2020, 2021, 2022 (2023)**

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரல்**

குறித்த பரீட்சையை 2023.03.18 ஆம் திகதி நடாத்தப்பட்டதோடு இப்பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டினை மிகவிரைவாக நடாத்தி பெறுபேற்றினை வழங்குவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. தமது பாடசாலையில் இப்பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்கள் முறையாக பூரணப்படுத்தப்பட்டு உடனடியாக பெற்றுக்கொள்வதற்கு தங்களது ஒத்துழைப்பு மிக முக்கியமாகும். இதற்காக பின்வரும் அறிவுறுத்தல்களை தங்களது விசேட கவனத்திற்கு கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலை முறையில் மாத்திரம் கோரப்படுவதோடு 2023.11.03 ஆம் திகதி முதல் 2023.11.10 ஆம் திகதி வரை www.doenets.lk எனும் இணையத்தளத்தில் அல்லது www.onlineexams.gov.lk/eic என்ற இணைய முகவரி மூலமும் நிகழ்நிலை ஊடாக தங்களது விண்ணப்பப்படிவங்களை அனுப்பலாம். (முடிவுத்திகதியின் பின்னர் அனுப்பப்படும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

2. விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் சகல ஆசிரியர்களும் நிகழ்நிலை முறையில் மாத்திரம் விண்ணப்பப்படிவங்களை அனுப்புமாறு அறிவுறுத்தல் வழங்குக.

3. பதிவிறக்கம் செய்யப்பட்ட (Downloaded) விண்ணப்பப்படிவத்தில் 11(a) பகுதியில் நேர அட்டவணையை சரியாக பூரணப்படுத்தி தங்களிடமோ அல்லது பிரதி அதிபரிடமோ உறுதிப்படுத்த வேண்டும்.

4. விண்ணப்பப்படிவத்தில் 12, 13 மற்றும் 14 ஆம் பகுதிகளுக்குரிய சரியான தகவல்களை வழங்குமாறு ஆசிரியர்களுக்கு விசேடமாக அறிவுறுத்தல் வழங்கவும்.

5. விண்ணப்பப்படிவத்தில் 15வது பகுதியின் கீழே விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை இட்டு சரியாக பூரணப்படுத்தி தங்களுக்கு வழங்கியுள்ள விண்ணப்பப்படிவங்களுக்குரிய விண்ணப்பதாரிகளை மாத்திரம் மதிப்பீட்டுக்காக சான்றுப்படுத்தவும்.

❖ மிக முக்கியமானது

6. பதிவிறக்கம் செய்யப்பட்ட (Downloaded) விண்ணப்பப்படிவத்தின் 16வது பகுதியில் அதிபரினால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.

7. Scholl Login ஊடாக Verification of Making Examiners ற்கு சென்று விண்ணப்பதாரிகள் தொடர்பில் தங்கள் சான்றுப்படுத்தலை குறிப்பிட்டு நிகழ்நிலை ஊடாக (Online) அனுப்புவது (Submit) தங்களது கடமையாகும். இதற்காக பரீட்சைத் திணைக்களம் மூலம் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயனர்பெயர் (User Name), கடவுச்சொல் (Password) என்பவற்றைப் பயன்படுத்துக.

**8. சகல விண்ணப்பதாரிகளினதும் விண்ணப்பப்படிவங்கள் வன்பிரதியாக (Original Hard Copy) உறுதிப்படுத்தப்பட்டு சகல சான்றிதழ்களின் பிரதிகளுடன் கீழ்வரும் முகவரிக்கு 2023.11.10 ஆம் திகதிக்கு முன்பாக கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

9. அவ்வாறே அவ் விண்ணப்பப்படிவங்களின் பிரதிகளை அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்துக்கொள்வது முக்கியமானதென்பதுடன், இத் திணைக்களம் கோரும் சகல சந்தர்ப்பங்களிலும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**10. தாங்கள் பாடசாலைக்குரிய பதிவிறக்கம் (Download) செய்யப்பட வேண்டிய சாராம்ச அறிக்கையை (Summary Sheet) பதிவிறக்கம் செய்து அதிபர் பரீட்சித்து சான்றுப்படுத்தி 2023.11.10 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

பரீட்சை ஆணையாளர் நாயகம்,<br>
மதிப்பீட்டுக் (பாடசாலை பரீட்சைகள்) கிளை,<br>
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,<br>
த. பெ. 1503,<br>
கொழும்பு.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பொதத் தகவல் தொழில்நுட்பப் (GIT) பரீட்சை – 2019, 2020, 2021, 2022(2023) பரீட்சகர் விண்ணப்பப்படிவம்** எனக் குறிப்பிடல் வேண்டும்.

**நேரடித் தொடர்பு**

| | | | |
|---|---|---|---|
| 011 2784037 | - | W.P.G.P.N. பந்துவன்ச | - பரீட்சை ஆணையாளர் (மதிப்பீடு - பா.ப) |
| 011 2785633 | - | K.C.S த சில்வா | - பிரதி பரீட்சை ஆணையாளர் (மதிப்பீடு - பா.ப) |
| 011 2785663 | - | S. பாமினி | - உதவிப் பரீட்சை ஆணையாளர் (மதிப்பீடு - பா.ப) |
| 011 2785662 | - | K.G.C.J. பண்டார | - உதவிப் பரீட்சை ஆணையாளர் (மதிப்பீடு - பா.ப |
| 011 2785216 | - | K.K. விஜயரத்ன | - உதவிப் பரீட்சை ஆணையாளர் (மதிப்பீடு - பா.ப) |

011 2785231 / 011 2785681 - மதிப்பீட்டுக் (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை

பொதுத் தொலைபேசி -

011 2784201 011 2784204 011 2784206<br>
011 2785202 011 2786200 011 2786205<br>
011 2787207

நீட்சி - 205, 207, 208, 281, 304, 431, 440

கொடுப்பனவு தொடர்பான விபரங்களுக்கு -

011 2785228 -ஆணையாளர் (நிதி)<br>
011 2784213/011-2177387/011-2786282 -உதவி ஆணையாளர் (நிதி)

உடனடி அழைப்புகளுக்கு **(Hot Line) – 1911 (24 மணித்தியாலங்களும்)**

**W.P.G.P.N. பந்துவன்ச**<br>
பரீட்சை ஆணையாளர்<br>
பா.ப (மதிப்பீடு)

**ஒப்பம்: H.J.M.C. அமித் ஜயசுந்தர**<br>
பரீட்சை ஆணையாளர் நாயகம்

## விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்புவதற்கான அறிவுறுத்தல்கள்

**விண்ணப்பதாரிக்கான அறிவுறுத்தல்கள்**

1. நட்சத்திர (*) குறியீட்டினால் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் கண்டிப்பாக நிரப்பப்பட வேண்டியதுடன், ஏனைய பகுதிகளில் தமக்கு உரியவற்றை பூர்த்தி செய்தல் வேண்டும்.
2. இதன்போது உங்களால் உண்மையான தரவுகள் வழங்கப்பட வேண்டும். பொய்யான தகவல்களை முன்வைத்தல் நீண்டகால பரீட்சை கடமை தடைக்கு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு காரணமாகும்.
3. விண்ணப்பப்படிவத்தின் சகல பகுதிகளையும் பூரணப்படுத்தி Submit Button Click செய்ததன் பின்னர், உங்கள் விண்ணப்பப்படிவத்தினை PDF வடிவில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும். குறித்த விண்ணப்பத்தின் வன்பிரதியை (Hard Copy) நீங்கள் வைத்திருத்தல் வேண்டும்.
4. குறித்த வன்பிரதியின் (Hard Copy) 11 (a) பகுதியில் (நேர அட்டவணை) கையெழுத்தினால் பூர்த்தி செய்யப்பட்டு அதிபர் / பிரதி அதிபர் / உதவி அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
5. சகல விண்ணப்பதாரிகளும் தமது தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான கல்விச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதியினை (பாடம் அடங்கிய பக்கத்துடன் விண்ணப்பத்தோடு இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
6. **முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

**அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தருக்கான அறிவுறுத்தல்கள்**

7. **குறித்த அதிபர் / நிறுவனத் தலைவரினால் பதிவிறக்கம் (Downloaded) செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் 16 ஆவது பிரிவு பூரணப்படுத்தப்பட வேண்டும்.**
8. **சகல விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்களினதும் உண்மைப் பிரதி (Original Hard Copy) மற்றும் சான்றுபடுத்தப்பட்ட இணைப்புகளோடு 2023.11.10 ஆம் திகதிக்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பாடசாலை பரீட்சைகள் (மதிப்பீட்டுக்) கிளை,
இலங்கை பரீட்சை திணைக்களம்,
தபால்.பெட்டி இலக்கம் 1503, கொழும்பு.

- குறித்த விண்ணப்பப்படிவங்களின் பிரதிகளினை கோவைப்படுத்தி காரியாலயத்தில் வைத்திருத்தல் கட்டாயமானது.
- **பாடசாலை விண்ணப்பதாரிகள் தொடர்பில் பதிவிறக்கம் (Download) செய்வதற்காக உள்ள சாராம்ச அறிக்கையினை தரவிறக்கம் செய்து, பின்னர் அதிபர் பரீட்சித்து ஒப்பமிடவும். அவ்வறிக்கையினை 2023.11.10 ஆம் திகதிக்கு முன்னர் மேலே காட்டப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

9. கடிதம் அனுப்பப்படும் உறையின் இடப்புறத்தின் மேல் மூலையில் "GIT 2019,2020,2021,2022 (2023) பரீட்சகர் விண்ணப்பம்" எனக் குறிப்பிடவும்.
10. இதற்கு மேலதிகமாக, விண்ணப்பப்படிவத்தின் 04 ஆவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனிக்கவும்.

**பொது தொலைபேசி**

| | | |
|---|---|---|
| **011 - 2784201** | **011 - 2784204** | **011 - 2484206** |
| **011 - 2787207** | **011 - 2785202** | **011 - 2786200** |

**டப்.பீ.ஜீ.பீ.என் பந்துவங்ச**
பரீட்சை ஆணையாளர் (பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீடு)

**விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் :**

1.1 **2011.03.01 அம் திகதியடப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட 03 (01) 2009ம் இலக்க சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.**

1.2 **கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த, தற்போது கல்வி அமைச்சின் கீழ் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.**

அ. தகவல் தொழில்நுட்பப் பாடத்துடனான பொது பயிற்சி / விசேட ஆசிரியர் பயிற்சி / தேசிய கல்வியியற் கல்லூரிப் பயிற்சி அல்லது பட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும் அத்துடன் குறித்த பாடத்திற்கான முறையான மற்றும் நிரந்தரமான நியமனத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

ஆ. பாடசாலையில் சேவையாற்றுபவராயின் க.பொ.த. (உ.தரம்) தரங்களில் தற்போது பொதுத் தகவல் தொழில்நுட்பம் (GIT) கற்பித்தலில் ஈடுபடல் அல்லது க.பொ.த. (உ.தரம்) / க.பொ.த. (சா.தரம்) தரங்களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) பாடக் கற்பித்தலில் ஈடுபடல்.

அல்லது

க.பொ.த (உ.தரம்) / க.பொ.த (சா.தரம்) களில் மேற்படி பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகராக (ISA) கடமையாற்றுதல்.

அல்லது

இ. கணினிவள மத்திய நிலையத்தில் குறித்த பாடத்தினைக் கற்பிக்கும் கடமைகளில் ஈடுபடும் ஆலோசனையாளரான இருத்தல்

1.3 இல 10 ஐப் பூரணப்படுத்தும்போது விண்ணப்பிக்கும் பாடத்திற்கு பொருத்தமான தகுதியினைக் குறிப்பிடுதல் அவசியமாகும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

1.4 விண்ணப்பப்படிவத்தின் 13 ஆம் 14 ஆம் பந்திகளைப் பூரணப்படுத்தும்போது "ஆம்" (Yes) அல்லது "இல்லை" (No) என்பதனை தெளிவாக (✓) அடையாளமிட்டு குறித்துக்காட்டுக. அவ்வாறு குறிக்காத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

* **தற்போது தங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் நடைபெறுமாயின் அல்லது தாங்கள் பரீட்சை கடமைகளில் இருந்து தடைசெய்யப்பட்டிருப்பின் இப்பதவிக்கான விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க முடியாது.**

(குடும்ப உறுப்பினர் எனப்படுவோர் - தங்களின் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும், தங்களினதும் துணைவரினதும் சகோதர சகோதரிகளும், அவர்களது பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும் ஆவர்.)

1.5 மேற்படி பரீட்சையின் மதிப்பீட்டு நிலையங்கள் கீழ்வரும் நகரங்களில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மதிப்பீட்டு நிலையங்கள் நிறுவ எதிர்பார்க்கும் நகரங்களும் நகர எண்ணும்**

| | | | |
|---|---|---|---|
| 01. கொழும்பு | 15. இரத்தினபுரி | 28. தங்கல்லை | 45. ஹற்றன் |
| 03. ஹோமாகம | 16. எம்பிலிபிட்டி | 30. குருநாகல் | 46. மொனராகலை |
| 08. ஹொரன | 19. பண்டாரவளை | 32. குளியாபிட்டி | 48. கல்முனை |
| 10. களுத்துறை | 20. பதுளை | 33. சிலாபம் | 49. அக்கறைப்பற்று |
| 12. நீர்கொழும்பு | 23. அம்பலாங்கொட | 35. அனுராதபுரம் | 50. மட்டக்களப்பு |
| 13. கம்பஹா | 25. காலி | 37. திருகோணமலை | 51. வவுனியா |
| 14. நிட்டம்புவ | 27. மாத்தறை | 38. கேகாலை | 52. யாழ்ப்பாணம |
| | | 41. கண்டி | 57. தம்புள்ள |

குறிப்பு : **போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத நகரங்களில் மதிப்பீட்டு நிலையங்கள் நிறுவப்படமாட்டாது. எனவே இரண்டாவது தெரிவையும் குறிப்பிட வேண்டும்.**

1.6 அலுவலகம் அல்லது தனிப்பட்ட முகவரிக்கு அருகாமையில் உள்ள மதிப்பீட்டு நிலையத்திற்கு நியமனம் வழங்கப்படும். குறித்த மத்திய நிலையத்தில் போதியளவு தேவைப்பாடு இல்லை எனில் வேறு அண்மித்த மத்திய நிலையத்திற்கு நியமிக்கப்படுவீர்கள்.

1.7 இவ்விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து (16 ஆவது பந்தி தவிர்த்து) உங்களது அதிபர் / நிறுவனத் தலைவரிடம் கையளிக்கவும்.

**02. விண்ணப்பத்தினை உறுதிப்படுத்தல் :**

ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவம் பாடசாலை அதிபராலும், வலயத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்கள் வலயக்கல்வி பணிப்பாளராலும் கோட்டத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்கள் கோட்டக் கல்வி பணிப்பாளராலும் ஏனைய நிறுவனங்களில் பணியாற்றுவோர் நிறுவனத் தலைவர் ஊடாகவும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**03. உறுதிப்படுத்தும் அலுவலருக்கான அறிவுறுத்தல்கள் (அதிபர் / நிறுவனத் தலைவர்) :**

3.1 இப்படிவத்தில் விண்ணப்பதாரியால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையா என்பதைப் பரிசீலிக்கவும்.

3.2 மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியென 3 ஆம் பக்கத்திலுள்ள உரிய இடத்தில் கட்டாயமாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

3.3 16 ஆம் பந்தியில் விண்ணப்பதாரி தொடர்பான கணிப்பினை குறிப்பிட்டு, ஒப்பம் மற்றும் பதவி முத்திரை இடல் உங்களது பொறுப்பாகும்.

3.4 இது அந்தரங்க அறிக்கையாகும். உங்களுக்கு கிடைக்கப்பெறும் சகல விண்ணப்பப்படிவங்களையும் உறுதிப்படுத்திய பின்னர் உரிய இணைப்புகளுடன் கோவைப்படுத்தி பிரதிகளை தம்வசம் வைத்துக் கொண்டு விண்ணப்பப்படிவங்களை 2023.11.10 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் **"GIT 2019,2020,2021,2022 (2023) பரீட்சகர் விண்ணப்பப்படிவம்"** எனக் குறிப்பிடவும்.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பாடசாலை பரீட்சைகள் (மதிப்பீட்டுக்) கிளை,**
**இலங்கை பரீட்சை திணைக்களம்,**
**த.பெ.இல - 1503,**
**கொழும்பு.**